விலை 20/-

"ஆய கலைகளில் ஆற்றல் பெருக
கணமணி கரம் தருவாள்!"

# கண்மணி

கண் 5 வைகாசி 2009 மணி: 12



## கண்மணியின் உள்ளே....


- நாளைய தலைவர்களுக்காக. பா.தனபாலன்
- திகைக்கவைக்கும் திருக்குறள் நூலமைப்பு - சங்குவேலிச்சாந்தன்
- வாழ்க்கை சிறக்க யோகாசனம்
- சாதனையாளர்சேர்பொன்இராமநாதன்
- டைனோசர் ஒன்றையொன்று உண்ணுமா?தாசன்
- புத்தக உலகில். மேகதூதன்
- மாணவர்க்கு சாயிபாபாவின் போதனைகள் - மக ஸ்ரீதரன்
- குறுக் கெழுத்துப் போட்டி
- பொது அறிவுப் போட்டி
- காட்சியும் கற்பனையும்


ஆசிரியர்
இரா. ஜெயக்குமார்
(B.A.Dip in Education)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
உரும்பிராய்.

ஆலோசகர் குழு
பா. தனபாலன்,
(M; Phil in Education)
நிபுணத்துவ ஆலோசகர்,
கல்வி வழிகாட்டல் ஆலோசனை
நிலையம், யாழ்ப்பாணம்.

ம.பார்வதிநாதசிவம்,
புலவர்

சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம்
(B.A,Dip in Edu.SLEAS )

கவிமணி க.ஆனந்தராஜா
(ஓய்வு பெற்ற அதிபர்)

யாழ் தினக்குரல் பார்வையில்
கணமணி 14.04.2009--


நூல் அகம கண்மணி

**இலட்சியம் – சாதனை – வெற்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய தலைவர்களுக்காக



இன்றைய மாணவர்கள் பல்வேறு வகைகளில் தமது ஆற்றல்களை விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும். இவ் ஆற்றல்களில் முதன்மையானது தலைமைத்துவ ஆற்றலாகும். இவ் ஆற்றலை எல்லா மாணவர்களும் பெற்றிருக்க வெண்டும். எவரேனும் ஒருவர் ஏனையோருக்கு முன் மாதிரியாக நின்று செயற்படுவாரானால் அவரால் மேற்கொள்ளப்படும் கருமம் தலைமைத்துவமாகும்.

இதனை மோர்வின் என்ற பேரறிஞர் ''தூய்மையாகவம், சிக்கனமாகவும், செயற்பட்டு தன்னைச் சார்ந்துள்ளோர் மீது நேர்க்கணியமாகச் செல்வாக்கைச் செலுத்தக்கூடிய ஆற்றல்கள் அனைத்தும் தலைமைத்துவத்திற்குள் அடங்கும்'' என்கிறார். மாணவர்கள் தமது தலைமைத்துவ ஆக்கங்களை மேம்படுத்த பின்வரும் பண்புகளை விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும்.

- **குழு உணர்வுடன் ஒன்றிணைந்து வழிநடத்தல்**
- **சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்தல்**
- **பெரியவர்களையும், கற்றோர்களையும் கனம் பண்ணுதல்**
- **பிறர் தன்னை உதாரணம் காட்டி நடக்கக்கூடியவாறு நற் செயல்களில் ஈடுபடல்.**
- **சரியான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆர்வத்தைக் கொண்டிருத்தல்**
- **தன்னம்பிக்கையும் மற்றவர்களை கண்காணிக்கும் திறமையைக் கொண்டிருத்தல்.**

இவ்வாறான பண்புகளை மாணவர்கள் தாம் கற்கும் போதும் இணைபாட விதானச் செயற்பாடுகளாக விளையாட்டு, மன்றங்கள், சாரணீயம் சிரமதானம், சமூகசேவை போன்ற பணிகளில் ஈடுபடும் போதும் பெறக்கூடியதாக இருக்கும். மற்றவர்களுடன் இணைந்து இவ்வாறான பணிகளில் ஈடுபடும் போது பல சமூகத்தினர்களையும், ஆளிடைத்தேர்ச்சிகளையும் பெறுகின்ற சந்தர்ப்பங்கள் கிடைக்கும். இவ்வாறான பல்வேறு விதமான சந்தர்ப்பங்களை வழங்குகின்ற களமாகப் பாடசாலைகள் திகழ்கின்றன. இவ்வாறான ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் பாடசாலைகளில் பயன்படுத்தியவர்களே எதிர்காலத்தில் பெரும் தலைவர்களாகப் பல சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள். ஆபிரகாம் லிங்கன், மிகையில் கோர்பச்சேவ், மாவோசேதுங், நேரு, மகாத்மா காந்தி, போன்றோர் இதற்கு உதாரணமாவார்கள்.

இவ்வாறாக மாணவர்களுக்கான தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் சமூகத்தையும் சார்ந்திருக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் மேற்கூறப்பட்டோர் தமது பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்ற முடியாத பல தடைகளை எதிர்நோக்குகின்றார்கள். இதனால் எமது மாணவர்களின் பலவிதமான தலைமைத்துவ ஆற்றல்கள் விருத்தியாகாமல் உள்ளன. இதை உணர்ந்து பாடசாலையிலும் வீட்டிலும், சமுதாயத்திலும் எம் இளம் சந்ததிகளாக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பண்புகளை விருத்தியாக்க வேண்டியுள்ளது. இதற்குப்புதிய செயற்திட்டங்களையும், செயலமர்வுகளையும் உருவாக்க வேண்டியுள்ளது. மாணவர்களே நீங்கள் சிறந்த தலைவர்களாக வர

- **பிறருக்காகச் சிந்தித்தல், முயற்சிகளில் முன்னிற்றல், ஏனையோருக்கு வழிகாட்டல், இடர்களை எதிர்கொள்ளல் பண்புகள் பெற வேண்டியுள்ளது.**
- **எந்த ஒரு செயற்பாட்டிற்கும் தெளிவானதொரு தீர்மானத்தை மேற்கொண்டு திட்டமிடல் வேண்டும்.**
- **மாறுபட்ட மனிதர்களுடனும், கலாசாரத்துடனும், சூழ்நிலைகளுடனும் முரண்பாடின்றிப் பொருந்துதல்.**
- **பிரச்சினைகள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அங்கு அஞ்சி ஒடுங்காமல் மாற்றுவழிகளைத் தேடுதல்.**
- **சுயகற்றல், வாசிப்பு, கலைகளில் ஈடுபடல், ரசித்தல், நிகழ்ச்சிகளில் பங்குபற்றல் மனப்பாங்குகளைப் பெறல்.**

இவ்வகையில் மாணவர்களே நீங்கள் பாடசாலையிலும், வீட்டிலும் சமூகத்தில் செயற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தலைமைத்துவ ஆற்றலை விருத்தியாக்கிக், கொள்ளுங்கள். அப்போது உங்களுடைய தனிப்பட்ட ஆளுமையும், ஆர்வங்களும், விருத்தியாகும். அவ்விருத்தி உங்களைச் சிறந்த, மற்றவர்களுக்கு வழிகாட்டுகின்ற தலைவர்களாக உருவாக்கும். இவ் உருவாக்கம் உங்களுடைய கல்வி அபிவிருத்திக்கும், சவால்களை எதிர்கொண்டு மேலும் பல சாதனைகளைச் செய்யவும் உதவும். புதிய ஆக்க சக்தி உங்களில் மிளிரும். சிறந்த உயர்ந்த மனிதப்பண்புடையவர்களாக நீங்கள் ஏனையோருக்கு முன்மாதிரியாளர்களாகச் செயற்படுவீர்கள்.

பா. தனபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகைக்க வைக்கும் திருக்குறள் நூலமைப்பு

திருவள்ளுவனால் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட பெருநூலைத் திருக்குறள் என்பர். இதைத் தமிழ் மறை, பொது நூல், தமிழ் வேதம், முப்பால் மற்றும் பெயர்களைக் கொண்டும் குறிப்பிடுவர். விடயங்களைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், எளிய முறையிலும், அழகாகவும் இவ்விரண்டு வரிகளில் கூறும் ஒரு நூலாயின் அது திருக்குறள் தான்.

திருக்குறளனது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பெரும் பிரிவுகளாக இயற்றப்பட்டுள்ளது. திருக்குறளில் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரதிலும் 10 குறள்கள் உள்ளன. திருக்குறள் நூலின் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, அறன் வலியுறுத்தல், நீத்தார் பெருமை என்ற நான்கு அதிகாரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முதலாவது பாலான அறத்துப்பாலில் மொத்தம் 34 அதிகாரங்கள் உள்ளன. பொருட்பாலில் மொத்தம் 70 அதிகாரங்கள் உள்ளன. காமத்துப்பாலில் மொத்த 25 அதிகாரங்கள் உள்ளன.

இந் நிலையில் திருக்குறள் நூலின் அமைப்பினைச் சற்று ஆராய்ந்தோமோயானால், அதில் சில எண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

திருக்குறளில் மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அந்த 133 என்பதன் எண்களாக 1,3,3 என்பவைகளைக் கூட்டினோமேயாயின் 7 என்ற எண் வருகிறது.

அறத்துப்பாலில் மொத்தம் 34 அதிகாரங்கள் உள்ளன. அந்த 34 என்பதன் எண்களைக் கூட்டினாலும், 7 என்ற என்தான் வருகிறது.

பொருட்பாலில் மொத்தம் 70 அதிகாரங்கள் உள்ளன. அந்த 70 என்பதன் எண்களைச் கூட்டினாலும் 7 என்ற எண்தான் வருகிறது.

காமத்துப்பாலில் மொத்தம் 25 அதிகாரங்கள் உள்ளன. அந்த 25 என்பதன் எண்களைக் கூட்டினாலும் 7 என்ற எண் தான் வருகிறது.

திருக்குறளில் 3 பெரும் பிரிவுகள் உள்ளன. ஆகவே 3 என்ற எண்ணுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

திருக்குறளின் ஆரம்பத்தில் 4 அதிகாரங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆகவே திருக்குறள் நூலமைப்பில் 4 என்ற எண்ணும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

நூலின் ஆரம்பத்தில் வைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கையும் (4) நூலின் பெரும் பகுதிகளின் எண்ணிக்கையும் (3) கூட்டினாலும், 7 என்ற எண் தான் வருகிறது.

திருக்குறளின் ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உள்ளன. ஆகவே திருக்குறளில் 10 என்ற எண்ணிக்கைகும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் திருக்குறள் நூலை அமைப்பதில், திருவள்ளுவன், 3,4,7,10 என்ற எண்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்துத்தான் தனது நூலை இயற்றியுள்ளான் என்பது தெரிகிறது.

இந்நிலையில் எமக்கு மிக முக்கியவொரு கேள்வி எழுகின்றது.

திருவள்ளுவன் ஏன் 3,4,7,10 என்ற எண்களுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து திருக்குறள் நூலை அமைத்துள்ளான்?

அவன் சார்ந்த சமய போதனையில் 3,4,7,10 என்ற எண்ணிக்கைகளில் கூறப்பட்டிருப்பவைகள் மிக முக்கியமானவையாக இருப்பதாலா? அல்லது வேறு காரணங்களாலா?

ஆனால் திருக்குறள் எந்தச் சமயமும் சாராத நூல் என்பர் ஒரு சாரார். இன்னொரு சாரார், திருவள்ளுவன் ஜைனன் என்பர். இன்னொருசாரார் அவன் சைவன் என்பர். பிறிதொரு சாரார் அவன் வைஷ்ணவன் என்பர். வேறு சாரார்கள், திருக்குறளில் பௌத்த போதனையில் வலியுறுத்தப்பட்டவைகளும், கிறீஸ்தவத்தில் வலியுறுத்தப்பட்டவைகளும், இஸ்லாமில் வலியுறுத்தப்பட்டவைகளும் காணப்படுவதாகவும் கூறுவர்.

ஆனால் திருவள்ளுவன் குறிப்பிட்ட வொரு சமயம் சார்ந்தவனாகத்தான் இருந்திருக்க முடியும். அப்படியாயின் அவன் எச்சமயம் சார்ந்தவன் என்பதை அறியத் திருக்குறள் நூலில் கூறப்பட்டவைகளுடன் அதன் நூலமைப்பில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள எண்களும் உதவமுடியுமா என்பது மிக முக்கிய கேள்வியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எம்மை எந்தெந்த சமயப் போதனைகளில் 3,4,7,10 என்ற எண்ணிக்கைகளில் மிக முக்கிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன என்பதை ஆராய்ந்தறிய நிர்ப்பந்திக்கிறது.

பாடசாலைக் கல்விபாடத் திட்டத்தின் கீழ் இந்திய உபகண்டத்தின் பல்வேறு சமய போதனைகளின் அடிப்படைகள் கற்பிக்கப்படுகின்றனவா? இல்லாவிட்டால் எந்தச் சமய போதனையில் 3,4,7,10 என்ற எண்ணிக்கைகளில் மிக முக்கிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன என்பதை நாம் நாமாக அறியமுடியது போகும்.

ஆகவே சமயபாடம், தமிழமொழி போன்றவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுடாகவே இது பற்றி அறிய முற்படுங்கள். அடுத்த தடவை சந்திக்கும் போது இது பற்றிப் பார்ப்போம்.

சங்குவேலிச்சாத்தன்



## விடுகதைகள்

1 உச்சிக் கொப்பில் உரல் ஒன்று தொங்குது அது என்ன? பலாக்காய்

2. உமி போல பூக்கும் சிமிழ் போல காய்க்கும் அது என்ன? நெல்லிக்காய்

3. உயிரில்லாப் பறவை அது. ஊர் ஊராய்ப் பறக்கும் அது என்ன? கடிதம்

4. உடலோ சிவப்பு, வாயோ அகலம். உணவுகாகிதம், அது என்ன? தபாற்பெட்டி

5. உடல் உண்டு தலை இல்லை. கை உண்டு. கால் இல்லை. தானாகவே ஓடுவான். அவன் யார்? கடிகாரம்

6. உச்சியிலே பச்சைத் தோல். உள்ளங்காலில் உரோமம். அது என்ன? கரும்பு

7. இலை உண்டு. கிளை இல்லை. பூ உண்டு. காய் இல்லை. அது என்ன? கரும்பு

8. இளஞ்சிவப்பு ராணிக்கு இருபத்தினான்கு வெள்ளையர்கள். இரவும் பகலும் காவல். அது என்ன? நாக்கு

ஜெ.மேனகன்
தரம் – 9
யா/ நடேஸ்வரக்கல்லூரி

## எல்லாம் வேண்டும்!



மலரினைப் போல உண்மை
மலர்ந்திட வேண்டும்
நிலத்தினைப் போலப் பொறுமை
நிலைத்திட வேண்டும்
மதியினைப் போல ஒளி
மதியினில் வேண்டும்
மதுவினைப் போல இனிமை
மொழிதலில் வேண்டும்.

வண்ணத்தைப் போல வனப்பு
வளர்ச்சியில் வேண்டும்
விண்ணினைப் போல எண்ணம்
விரிந்திட வேண்டும்
தமிழனைப் போல வாழ்வு
தழைத்திட வேண்டும்
விழியினைப் போல மொழி
விளங்கிட வேண்டும்.

குணரட்ணசிங்கம் விதுஷாயினி
தரம்– 06
யா/ இந்துமகளிர் கல்லூரி

## காட்சியும் கற்பனையும் -01



மாணவர்களே! தரப்பட்ட காட்சியைக் கவனியுங்கள்.

உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள்.

5வரிகளுக்கு குறையாமலும் 8 வரிகளுக்கு மேற்படாமலும் கவிதைகளை எழுதி, சுய முகவரி, பாடசாலை முகவரியுடன் அனுப்புங்கள். காட்சிக்குப் பொருத்தமாக!

*சிறந்த 5 கவிதைகளுக்கு இலவச பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாழ்க்கை சிறக்க யோகாசனம்

பிறந்த மனிதன் வாழ்வதென்பதே கடமையாக ஆகிறது. இப்படி வாழுகின்ற மனிதன் உடல் ஆரோக்கியத்துடனும், மனோதிடத்துடனும் வாழுதல் என்பது மிகவும் முக்கியமாக விளங்குவது ஆசனம் ஆகும். இந்த ஆசனம் செய்தலுக்குரிய யோக நிலையை அடைகின்ற மனிதர்களை நாம் யோகாசனப் பயிற்சியை பெறக்கூடியவர்களாக கருதுதல் வேண்டியுள்ளது. மனம் போன போக்கில் வாழாமல், நித்தியமான, நிதானமான ,நிலையை அடைதலுக்கு வழிகோலுவது யோகாசனம் ஆகும். யோகம் என்பதற்குரிய பொருள் அதிஷ்டம் என்பது ஆகும்.



உடற்பயிற்சியினை நாம் மேற்கொள்ளுதலின் பலனாக உடலில் நித்தியமான சுகாதாரமான நிலையை அடைதல் என்பது முடிகின்றது. யோகாசனத்தினை பெண்களும், ஆண்களும் சேர்ந்தே செய்தல் என்பது முடியக்கூடிய நற்காரியங்களாகும். ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் உடல் நிலைமை தான் சீர் செய்து வைத்துக் கொள்வதென்பது மிகவும் முக்கியமான காரியமாக விளங்குவதாகும். நேரான எண்ணங்கள், சீரான உடல் கூறுகள் இவைகளினை அடைதலுக்கு உதவிக்கரமாக இருப்பது யோகாசனமே ஆகும். யோக நிலை என்பது நித்திரை நிலை எனவும் நாம் கொள்ளலாம். இந்த யோகாசனப் பயிற்சிகளினை மனிதராகப் பிறந்த நாம் சிறு பிரயம் முதற் கொண்டு பெரியவர்களாக ஆகின்ற வரையில் செய்து கொள்ளுதல் என்பது நிச்சயமாக முடியும்.

யோகப் பயிற்சிகளை நாம் காலையும். மாலையும் செய்தல் என்பது வேண்டும். அதிகாலையில் சூரியோதய நேரத்தில் நாம் செய்ய வேண்டியது இவையாகும். யோகாசனங்கள் பல்வேறு வகைகளாகச் செய்யப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் நாம் மேற்கொள்ள வேண்டுவதென்பது நிதானமான பயிற்சி முறைமைகளே ஆகும். யோக நிலையை வளர்த்துக்கொள்கின்றவர்களே சிறந்த யோகாசனப் பயிற்சியாளராக வருவதென்பது இயலும். தியானம் செய்யும் முறைமை என்பது யோகப் பயிற்சி முறைமையில் மனிதன் பத்மாசனம் செய்கின்ற முறைமையை ஒத்து விளங்குகின்றது. மனிதன் நிதானமாக இயல்பினை அடைதலுக்கு இந்த யோகாசனம் பெரிதும் உதவுகின்றது. தியானத்தினால் மனிதனுக்கு அமைதிஎன்பது நிச்சயமாகக் கிடைக்கின்றது. இதனைப் போன்றே யோகாசனப் பயிற்சியின் முறைமையினாலும் அமைதி என்பது இலகுவானதாக்க கிடைக்கக் கூடிய வாய்ப்பு என்பது முடிவாகின்றது. யோகாசனம் செய்கின்ற மனிதர்கள் உறுதியாக மனஉறுதியாக இருத்தல் என்பது நிச்சயமானதொன்றாக விளங்குகின்றது.



யோகப் பயிற்சியின் பலனாகவே நம்மால் தீர்க்கமாக நல்ல இரத்த ஓட்டத்தினையும், திடமான உடல் நிலையையும் அடைதல் என்பது நிச்சயமாக முடிகின்றது. மனிதனுக்கு வாழ்க்கையில் நிம்மதி என்பது தேவை என்றால் இந்தகு யோகாசனப் பயிற்சி தனிலே ஈடுபாடு கொள்வதென்பது நிச்சயமாக முடியக்கூடிய காரியமாக விளங்குகின்றது. மனிதன் மனிதனாக விளங்க, மிருகத் தன்மையில் இருந்து விடுபட உதவிக்கரமாக இருப்பது இந்த யோகப் பயிற்சி முறைமைய விளக்குகின்றது. கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருப்பது என்பது தியானப் பயிற்சி என்பதை நாம் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும். இதனைப் போன்றே விளங்குதலே யோகாசனப் பயிற்சி ஆகும்.

**சிரிக்க..... சிரிக்க.....**

ஒரு நான் ஆசையா ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் சாப்பிட்டது தப்பாப் போச்சுடா!
"ஏன்டா?"
"ஆறு மாசம் தொடர்ந்து மாவாட்ட வேண்டிய தாயிடுச்சே"

சி. சோதிமூர்த்தி
யோகப் பயிற்சி ஆசிரியர்
ஸ்ரீ மகாதேவா ஆச்சிராமம்
வேதாந்தமடம், கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ எப்போது இரு முறை காலை உணவை உண்டீா?



கொங்கோட் விமானம் பூமி சுழலும் வேகத்தை விட விரைவாகச் செல்லும். இதன் கருத்து யாதெனில் நீ கிழக்கிலிருந்து மேற்கிற்கு இவ் விமானத்தில் செல்லும் போது விரைவாகச் சென்று விடுவீா் என்பதாகும்.

நியூயோா்க் நகரின் நேரம் லண்டன் நகரின் நேரத்தை விட ஐந்து மணி நேரம் பிந்தியதாகும். ஆனால் கொங்கோட் விமானம் லண்டனிலிருந்து நியூயோா்க்கிற்குச் செல்ல ஐந்து மணி நேரத்திலும் குறைவான நேரமே எடுக்கும். இதன் கருத்து நீ புறப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவே நியூயோா்க்கை அடைந்து விடுவீா் என்பதாகும். நீ காலை உணவை உண்டபின் லண்டனிலிருந்து புறப்பட்டால் நியூயோா்க் நகரவாசிகள் நித்திரையால் எழும்ப முன்னா் நீ நியூயோா்க்கை அடைந்து விடுவீா். எனவே உமது அடுத்த உணவும் நியூயோா்க்கின் காலை உணவாகும்.

இங்கிலாந்து பிரெஞ்சு பொறியியலாளா்களால் கொங்கோட் விமானம் தயாரிப்பு முயற்சி 1962ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் 1976 வரை சாதாரண பயணிகள் அதில் பயணிக்கவில்லை. இவ் விமானம் 100 பிரயாணிகள் வரை ஏற்றிச் செல்லக்கூடியது. இவ் விமானம் மிக விரைவாகப் பயணம் செய்யும். ஆனால் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதுடன் பலத்த ஒலியையும் உண்டாக்கும். ஐரோப்பியா்கள் இவ் விமானம் தயாரிக்கையில் அமெரிக்கா்கள் போஜிங் விமானத்தைத் தயாரித்தனா். இவ் விமானம் பெரிது. ஒலி குறைந்தது. அத்துடன் மலிவானது.

## டைனோசர் ஒன்றை ஒன்று உண்ணுமா?



பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னா் பூமியானது டைனோசா் எனப்படும் ஊா்வனவின் ஆட்சிக்குட்டிடிருந்தது. அவற்றுட் பல 80 தொன் நிறையும் அமைதியான தாவர உண்ணிகளாகவும் வாழ்ந்து வந்தன. அவற்றின் பற்கள் ஒவ்வொன்றும் 15 சென்ரிமீற்றா் நீளம் இருக்கும். சில டைனோசா்கள் பறக்கக் கூடியனவாகவும் இருந்தன.

அமெரிக்காவிலுள்ள நியூமெக்சிக்கோவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட டைனோசா்களின் உயிா்சுவடுகளின் சில சான்றுகள் காணப்படுகின்றன. அவற்றின் உடலினுள்ளே சிறிய டைனோசா்களின் எலும்புக் கூடுகள் காணப்பட்டதே ஆகும். டைனோசா்கள் குட்டியீன்று இனத்தைப் பெருக்குவதில்லை. அவை முட்டையிட்டு இனம் பெருக்கும். எனவே அவற்றுள் காணப்பட்ட சிறிய டைனோசா்களின் எலும்புக் கூடுகள் டைனோசா்கள் ஒன்றையொன்று உண்ணும் என்று நிரூபிக்கின்றன.

தாசன்

## பாசமும் வேஷமும்

பாசமுள்ள உள்ளத்தில்
வேஷமிருக்காது
வேஷமுள்ள உள்ளத்தில்
பாசமிருக்காது
பாசம் உன்னை
பத்திரப்படுத்தும்
வேஷம் உன்னை
வேதனைப்படுத்தும்
பாசத்தை பறி
கொடுத்து விடாதே
வேஷத்தை விலை
கொடுத்து விடாதே



அ. உதயசாந்தினி
11
யா/ வயாவிளான். ம.ம.வி

## விடுகதைகள்



1. இவன் அழுதால் உலகம் சிரிக்கும் இவன் யாா்? வானம்
2. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் தூசி கிளம்பாது. அவா்கள் யாவா்? எறும்பு
3. மேலே பறப்பவனுக்குக் கீழே கூடிவாளம் அது என்ன? பட்டம்
4. அரிசி போலப் பூப்பூக்கும். அம்மாடி என்று காய்காய்க்கும். அது என்ன? மிளகாய்
5. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவன். அவன் யாா்? செங்கல்

த. கிருஷிகன்
தரம்- 5A
யா/ கோப்பாய் நாவலா் தமிழ் வித்தியாலயம்

**சிந்திப்போமா?**

எண்ணங்களுக்கு வலிமை அதிகம் - திண்ணிய எண்ணங்கள் செயல் வடிவம் பெறும். - வேய்ண்டயா் -

செய்ய முடிந்தவா்கள் செய்கிறாா்கள். முடியாதவா்கள் கற்பிக்கிறாா்கள் -பொ்னாட்ஷா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி – 01

மாணவர்களே…! பின்வரும் பொது அறிவு வினாக்களுக்கான விடைகளை எழுதி 25.05.2009 இற்கு முன்னர் கிடைகக் கூடிய வகையில் அனுப்புங்கள். உங்கள் முழுப்பெயர், தரம், பாடசாலை, முகவரி என்பவற்றையும் எழுதி அனுப்புங்கள். சரியான விடை தரும் 5 மாணவர்களுக்கு இலவச பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

1. தற்போது நடைபெற்றுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தல் எத்தனையாவது தேர்தல் ஆகும்?
2. எதிர்க்கட்சித் தலைவர் இராணுவ உதவியுடன் ஜனாதிபதி ஆகியுள்ள இந்து சமுத்திரவலய நாடு எது?
3. உலக நிதி நெருக்கடியை எதிர்கொள்ள பத்தாண்டுத் திட்டத்தில் கைச் சாத்திட்டுள்ள எண்ணெய் வள நாடுகள் எவை?
4. இலங்கையில் முதன் முதலாக சிறு நீரக மாற்று சிகிச்சை மற்றும் சிறு நீரக வியாதிகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள இடம் எது?
5. ITV என்பதன் விரிவான பெயர் யாது?
6. "பூ" எனும் சிறுகதைத் தொகுதியினை எழுதியவர் யார்?
7. அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லக்கூடிய பிரித்வி – 2 ஏவுகணையை பரிசோதித்துள்ள நாடு எது?
8. பல படியாக்க முறையில் முதலாவது ஒட்டகக் குட்டியை உருவாக்கியுள்ள நாடு எது?
9. 2010 ஆம் ஆண்டு பொது நலவாய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாடு எது?
10. எந்த நாட்டின் கடற்பிராந்தியத்தில் கொள்ளை நடை பெறுகின்றது?

## அறிந்து கொள்ளுங்கள்

1 பிறந்த அன்றே இறக்கும் உயிரினம்– ஈசல்

2. இனிப்புச் சுவையை அறிய முடியாத விலங்கு– பூனை



3. பறக்க மட்டும் தெரிந்த பறவை– ஹம்மிங்பேர்ட்

4. பறவைகள் கூடு கட்டாத மரம்– இலவந்தை

5. உப்பு நீரை விரும்பிப் பருகும் உயிரினம்– ஒட்டகம்

**சண்முகராஜா சுகன்னியா**
**யா/நடேஸ்வரக் கல்லூரி**
**[பழைய மாணவி]**

சிரிக்க.... சிரிக்க...

"அவன் ரொம்பக் கஞ்சன் என்று எப்படிச் சொல்கிறாய்?"

"பென்சிலை சீவிய பின் மரச்சீவலை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகிறானே"

## அம்மா



பெற்றவளே என் தாயே!
பெண் தெய்வம் நீயே!
கண்மணி போல் எனைநினைத்து
காப்பவளும் நீயே!
கல்வி முதல் உணவு வரை
உதவுபவளும் நீயே!

உடல் நோயிலும் துயரத்திலும்
உடனிருப்பவளும் நீயே!
அன்புடனும் ஆவலுடனும்
அரவணைப்பவளும் நீயே!
பள்ளி செல்லும் வயதினிலேயே
பண்பு சொல்லித் தருபவளே!

பத்து மாதம் சுமந்தவளே!
பாலூட்டி வளர்த்தவளே!
பகல் இரவாய் தூங்காது
பாசக்கதைகள் சொல்பவளே!
பாரினிலே அல்லலுறாது உன்னை
பாசத்துடன் பராமரிப்பேன் தாயே!

**த.கிரிசாந்**
**தரம் 11A**
**யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தக உலகில்....

## இப்படியாற்று நூற்றியோராவது தடவையும்



நடராஜா சத்தியபாலன் எழுதிய "இப்படியாயிற்று நூற்றி யோராவது தடவையும்..." எனும் புதுக் கவிதை நூல் அண்மையில் வெளிவந்தது. இந் நிகழ்வு நாவலர் கலாசார மண்டபத்தில் நிகழ்ந்தது. இப்புத்தகத்தில் நாற்பத்து இரண்டு கவிதைகள் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகள் 1980 ஆம் ஆண்டு முதல் எழுதப்பட்டவை. "வாழ்க்கையின் மீதும் மனிதர்கள் மீதும் எனக்குள்ள நேசமும், வாழ்தலில் எனக்குள்ள பேரார்வமும் என்னை எழுத வைக்கின்றன" என்று நூலாசிரியர் தனது உரையில் குறிப்பிடுகின்றார். இப் புத்தகம் 63 பக்கங்களைக் கொண்டது. இதன் விலை 175 ரூபா ஆகும்.



**-மேகதூதன்**

அடுத்த இதழில்...... தாட்சாயணி எழுதும்......

*மீனவ புரத்து மீனரசி*

விறு விறுப்பூட்டும் புதிய தொடர் கதை ஆரம்பம்!

## நாடுகளின் தேசிய பறவைகள்

1) டென்மார்க் – வானம்பாடி
2) பர்மா – மயில்
3) இங்கிலாந்து – ரொபின்பறவை
4) இலங்கை – காட்டுக்கோழி
5) கனடா – வாத்து
6) தென் ஆபிரிக்கா – நீலக்கொக்கு
7) இந்தியா – ஆண்மயில்
8) அமெரிக்கா – கழுகு
9) வெனிசுலா – ட்ருப்பியால்
10) கொலம்பியா – பருந்து

வி.ஜனனி
தரம் - 07
யா/ கொக்குவில் இராமகிருஸ்ண வித்தியாசாலை

### சிந்திப்போமா?

செய்ய முடிந்தவர்கள் செய்கிறார்கள். முடியாதவர்கள் கற்பிக்கிறார்கள் - பேர்னாட்ஷா-

வாழ்க்கையின் மிகப் பெரிய சோகம் என்பது இழப்புக்கள் அல்ல. துர் அதிஷ்டங்கள் அல்ல. அச்சங்களே - ஆர்தர் பென்ஸன் -

நிதானமாகச் சிந்தியுங்கள். விரைந்து செயல் படுங்கள் - கிரேக்கம் -

மதிக்கப்படும் மனிதன் சிறப்பாகச் செயல் படுவான் - அமெரிக்கா –


நீங்கள் எடுக்கும் முடிவுகளில் தான் உங்கள் தலை விதி அடங்க இருக்கின்றது -ஆன்டனி ராபின்ஸ்

முன்னேற்றத்தை தூண்டுபவை மாற்றங்கள் மாற்றங்களுன்கோ எதிரிகள் உலாடு. - ராபர் கென்னடி –

## தூரப்போகும் நாரைகள்



தாட்சாயணி எழுதிய தூரப்போகும் நாரைகள் எனும் சிறுகதைத் 1.5.2009 அன்று வெளிவந்தது. இந்த நிகழ்வு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நிகழ்ந்தது. இச் சிறுகதைத் தொகுதி பதினான்கு சிறுகதைகளைக் கொண்டது. ஓ ... என் அழகிய கிராமமே, ஒரு வருஷத் தூக்கம், பொறி, சுழல், தூரப் போகும் நாரைகள், தொடரும் இலக்குகள், முடிவா? தொடக்கமா?, சிறகிழந்தவன், கெடுபிடி, வேர் துளைத்த மண், கட்டைவிரல், ஏன், காணாமல் போனவனுக்கு ஒரு கடிதம், கடைசிக் காலடி என்பன இச் சிறுகதைகளாகும். இந்நூலிற்கான அணிந்துரையை எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் எழுதியுள்ளார். அரசியல், குடும்ப உறவுகள், மீள் உருவாக்க இதிகாசக் கதைகள், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் சார்ந்த வையாக இக்கதைகள் உள்ளன.



இவை 1997 – 2008 காலப் பகுதியில் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தவை. இப்புத்தகம் 139 பக்கங்களைக் கொண்டது. இதன் விலை 250 ரூபா ஆகும்.

**- மேகதூதன்**

### *2 கேள்வி 1 பதில்*

1. பட்டம் பறப்பது எதனால்?
   படிப்புச் சிறப்பது எதனால்? — நூலால்
2. நல்ல பாம்பு தலை தூக்குவதேன்?
   நாம் கமரா முன் நிற்பதேன்? — படமெடுக்க
3. காடு குறைவது ஏன்?
   கால்வாய் நீள்வது ஏன்? — வெட்டுவதால்
4. பந்து எழும்புவது ஏன்?
   பையன் அழுவது ஏன்? — அடிப்பதால்
5. கொட்டாவி வருவது ஏன்?
   பிள்ளை அழுவது ஏன்? — பசியால்
6. தோட்டத்தைப் பதப்படுத்துவது எப்படி?
   தீனியைக் கோழி தின்பது எப்படி? — கொத்திக் கொத்தி
7. புத்தகத்தின் ஆடை எது?
   இரத்தம் உறிஞ்சும் உயிரினம் எது? — அட்டை
8. மலரால் தொடுக்கப்படுவது எது?
   சூரியன் மறையும் நேரம் எது? — மாலை

சி.அலெக்கியா
தரம் 10A
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனையாளர் சரித்திரத்தில்......

## சேர். பொன் இராமநாதன்



- இவர் பொன்னம்பலம் முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் மகனாக 16.04.1981இல் பிறந்தார்.
- தனது இளமைக்கல்வியை கொழும்பு இராசதானிக் கல்லூரியிலும், உயர் கல்வியை சென்னை இராணிக்கல்லூரியிலும் பயின்றார்.
- சட்டத்தரணியாகி பிரித்தானிய அரசின் "நைட்" பட்டத்தைம் பெற்றார்.
- 1892ஆம் ஆண்டு சட்ட நிருபண சபையின் முதல் தமிழ்ப்பிரதிநிதியாகப் பிரவேசித்து பல ஆண்டுகள் அரசியற் பணி புரிந்தார்.
- 1892இல் சைவ பரிபாலன சபை நிறுவப்பட தூண்டு கோலாக இருந்தார்.
- சைவத் தமிழ்ப் பெண்களின் கல்விக்காக 1913 ஆம் ஆண்டு மருதனார்மடத்தில் பெரும் பொருட் செலவில் இராமநாதன் கல்லூரியை அமைத்தார்.
- ஆண்களின் கல்வி வளர்ச்சிக்காக 1921இல் திருநெல்வேலியில் பரமேஸ்வரா ஆண்க்ள பாடசாலையை அமைத்தார். இதுவே 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக்கப்பட்டது.
- கொழும்பில் பொன்னம்பலவாணேச்சரம் கோயிலை அமைப்பித்தார். இது கருங்கல் சிற்ப வேலைகளுக்குப் பிரசித்தி பெற்றது.
- திருக்குறட் பாயிரம், இராமநாத பாஷ்யம், ஔவை நாயகியின் ஆத்தி சூடி, திருமந்திர விளக்கம், பவகத்கீதை ஆகிய நூல்களை பதிப்பித்து வெளியிட்டார்.
- 1915இல் சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது நீர் மூழ்கிக் கப்பலில் பிரித்தானியா சென்றார். மகாராணியிடம் முறையிட்டு ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களை மீட்க வழி செய்தார்.
- இவர் 1938இல் காலமான தன்னலமற்ற தலைவர் ஆவர்.

அ.இரஜீவன்
தரம் -8
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்



### விலங்குகளின் ஆயுட்காலங்கள்

பற்றீரியா : 20 நிமிடங்கள்
காளான்: 2 – 3 நாட்கள் அல்லது 10 வருடங்கள் அல்லது அதற்கும் மேல்.

பூக்கும் செடி மற்றும் மரங்கள்
பொப்பி மலர் : 6 மாதங்கள்
மூங்கில் : 30–60 வருடங்கள்

பூச்சிகள் மற்றும் ஐந்துக்கள்
இலையான் (ஈ) : 17–20 நாட்கள்
திமிங்கிலம் : 60 வருடங்கள்
ஓணான் : 12 வருடங்கள்
தீக் கோழி : 50 வருடங்கள் அதற் மேல்
மூஞ்சுறு, எலி : 1 வருடம்
ஆபிரிக்க யானை : 75 வருடங்கள்
சிங்கம் : 20 வருடங்கள்
மனிதனை விழுங்கும் திமிங்கிலம் : 90வருடங்கள்

ஸ்ரீ. பிரதீஸ்வரன்
தரம்-7
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி



### கவிதை
### உயிர் மூச்சு

மருத்துவர் கையில் குழாய்கள்
மற்றவர் கையிலும் குழாய்கள்
ஒருவர் கையில் உயிர் காக்கும் குழாய்
மற்றவர் கையிலோ உயிர்போக்கும் குழாய்
குழாயால் இந்த பிஞ்சு மூச்சு விடுகிறது!
மற்றவர் கையால் எத்தனையோ
பிஞ்சுகள் மூச்சை விடுகின்றன!!
இப்போது மருத்துவர்களும்
குழாய்களால் மூச்சை விடுகின்றனர்
அந்தோ மனிதரில் தான்
எத்தனை முரண்பாடு இறுதி மூச்சு உள்ளவரை...
என்பது இது தானோ?

ப. சியானா
08c
V.M.M.V

### ஏன் இந்த நிலைமை

என்அன்னையே!
இந்த பூமியில்
நீபடும் அவலம் தெரியாமலா
என்னையும் தவமிருந்து பெற்றாய்?

இவ்வுலகில் இயற்கை அன்னை
தந்த காற்றைக் கூட
என்னால் சுவாசிக்க
முடியவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக் கெழுத்துப் போட்டி- 01

மாணவர்களே ...! இப்போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்புங்கள். விடைகளை 25.05.2009 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்புங்கள். உங்களின் முழுப்பெயர், தரம், பாடசாலை, முகவரி என்பவற்றையும் அனுப்புங்கள். சரியான விடை எழுதும் 5 மாணவர்களுக்கு இலவச பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

## மேலிருந்து கீழ்

1. *தருமனுக்கு இன்னொரு பெயர்*
2. *சுய கௌரவம் என்றும் குறிப்பிடலாம்*
3. *கிரேக்கர்கள் இவ்வாறும் குறிப்பிடப்பட்டனர்.*
6. *மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கிளைத் திட்டங்களில் ஒன்று*
7. *சிறை வைக்கப்பட்டிருப்பவர்*
8. *தோற்கடி*
9. *அடிமைகள்*
10. *ஆண்கள் அணியும் பாரம்பரிய ஆடை*

## இடமிருந்து வலம்

1. *ஈழத்தில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை*
4. *உன்*
5. *ஊர் மக்களால் பரப்பப்படும் ஐயப்பாடான செய்தி*
8. *பெண்களிற்குக் குறிப்பிடப்பட்ட நாற்குணங்களில் ஒன்று*
9. *நட்சத்திரம்*
10. *பருவ காலங்களில் ஒன்று*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 9 | 6 | 7 |
| 4 | | 5 | | | |
| | | | | | ▨ |
| | | | 10 | | |
| | | 8 | | | |
| | ▨ | | | | ▨ |

## சிங்களம் அறிவோம்

1. தண்ணீர் - வதுர
2. பழரசம் - பல துரு வீம
3. இளநீர் - குரும்ப
4. கொய்யா — பேர
5. வௌவால் - வௌலா
6. கூடு — எலுவா
7. அணில் - லேனா
8. கிளி — கிரவா
9. பூனை — பூசா
10. யானை — அலியா

பு.கஜனி
தரம்- 5B
பொஸ்கோ

## ENGLISH SENTENCE

**I am going** - நான் போய்க்கொண்டு இருக்கின்றேன்
**I was going** - நான் போய்க்கொண்டு இருந்தேன்
**I will be going** - நான் போய்க்கொண்டு இருப்பேன்
**He is going** - அவன் போய்க்கொண்டு இருக்கிறான்
**He was going** - அவன் போய்க்கொண்டு இருந்தான்
**He will be going** - அவன் போய்க்கொண்டு இருப்பான்
**You are going** - நீ போய்க்கொண்டு இருக்கிறாய்
**You were going** - நீ போய்க்கொண்டு இருந்தாய்
**You will be going** - நீ போய்க்கொண்டு இருப்பாய்

**Greshian Bavitha**
**Seven B**
**J/ Kopay Christion college**


*சிரிக்க.. சிரிக்க...*
"ராத்திரி மாவட்டுகிற மாதிரி கனவு வருது டாக்டர்"
"நேற்றும் இதே மாதிரி ஏதாவது கனவு வந்ததா?"
"நேற்று ... உழுந்து ஊறப் போடுகிற மாதிரி கனவு வந்தது டாக்டர்"

"உலகில் எந்த நாட்டு மக்கள் சிரிக்கவே மாட்டார்கள்?" "சிரியா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா?





பு. கஜமுகன்
தரம்–8B
புனித பத்திரிசியார் கல்லூரி






சு. தமிழ்ச்செல்வி
தரம்–7f
யா/ வேம்படி மகளிர் கல்லூரி



ஞா. மயூரி
தரம்–10
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



ஐ. தஜிகா
தரம்–7
யா/ மகாஜனாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
# மாணவமணிகளுக்கான அறிவுரைகள்



1. மாணவர்கள் கல்வி கற்கும் அறை, மிகச் சாத்வீகமான சூழலைக் கொண்டிருத்தல் வேண்டும். அங்குள்ள படங்கள், வேறு பொருட்கள் என்பன ஒருவரின் மனத்தில் அமைதியையும், தூய்மையையும் தோற்றுவிக்க வேண்டும்.
2. கூட்டுறவு மனப்பான்மை, புரிந்துணர்வு, நல்ல இசைவு என்பன குடும்பத்தில் இருக்க வேண்டும். மன அமைதியைக் கெடுக்கும் குழப்ப சூழ்நிலைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. உண்ணும் உணவு அதிகம்புளி, கசப்பு, அதிக சூடு ஆக இருக்கக்கூடாது. இராஜச உணவு வகைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
4. கிடைப்பதெல்லாவற்றையும் குடிக்கவேண்டாம். தூய்மையான நீரைப் பருகுங்கள். மது பாவனைகள் தவிர்க்கப்படல் வேண்டும்.
5. உங்களது உணர்வுகளும், எண்ணங்களும் தூய்மையானவையாக இருந்தால் மட்டுமே தூய்மையான நல்ல குடும்பம் உருவாகும்.
6. வயதான சகல பெண்களையும் உங்கள் தாயாகப்பாருங்கள். ஒவ்வொரு இளம்யுவதிகளையும் உங்கள் சகோதரிகளாகக் காணுங்கள்.
7. கற்பதில் தூய்மை வேண்டும். ஒரு நல்ல புத்தகம் நல்ல மனதை உருவாக்கும்.
8. நம் சேவைகள் திக்கற்றவர்கட்டும், புறக்கணிக்கப்பட்டோருக்கும் சென்றடைவதாக இருக்க வேண்டும்.
9. ஆசைகளுக்கு வரம்பிடுங்கள். உணவு உடலைப் போஷிக்க. உடை எமது உடலைப் பாதுகாக்க. ஆசைகளைக் கட்டுப்படுத்துவது புலனடக்கத்திற்கு உதவும்.
10. பணத்தை வீணாக்காதீர்கள். பணத்தை வீண செலவு செய்வது மிகத்தீயது.

ம.க.ஸ்ரீதரன்


**மதுரம் இன்ஸ்ரியூட்**

*முன்பள்ளி முதல் A/L வரை உயர்ந்து நிற்கும் உயர் நிறுவனத்தில்*

- ⋆மாதிரி முன்பள்ளி
- ⋆தரம் 01 முதல்04 வரை விசேட ஆங்கில வகுப்புக்கள்
- ⋆தரம்05 விசேட புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி வகுப்புக்கள்
- ⋆Super Grade-6 (விசேட வகுப்புக்கள்)
- ⋆O/L Paper Class
- ⋆O/L Day class
- ⋆A/L கலை,வர்த்தகம், கணிதம் விஞ்ஞானம் பிரிவுகள்
- ⋆A/L Day Class
- ⋆விரைவில் மேலும் பல சேவைகள்,

*தலைமை நிறுவனம்*
*டச்சு வீதி, இருபாலை*
*கோப்பாய்.*

*உயர் கல்விப் பிரிவு*
*பருத்தித்துறை வீதி,*
*கட்டப்பிராய்.*

**விற்பனைக்கு**

ஒட்டு மாங்கன்று, ஒட்டு தேசி, தென்னங்கன்று, பலா, மாதுளை கொய்யாகன்று. ரெட்லே பப்பா, மலைவேம்பு, சவுக்கு, சமன்டலை, தேக்கு, முருங்கை, பூச்சாடி மற்றும் பூங்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு

நியு லங்கா பாம்,
கே. கே. எஸ். வீதி
இணுவில்.

கிளை
பலாலி வீதி ஊரெழு
(கணேசா பாடசாலை அருகாமை)


**வாசகர்கள் தங்கள் ஆக்கங்களையும் ஆலோசனைகளையும், போட்டிகளுக்கான விடைகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி**

இரா. ஜெயக்குமார், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org